








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 09.09.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்



- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- முக்கிய தினங்கள்
- நியமனங்கள்







# இந்திய நிகழ்வுகள்

- **இந்தியா, ஜப்பானிடமிருந்து 7000** கோடி ரூபாய் மதிப்பிலான **18 புல்லட்** இரயில்களை வாங்கவிருக்கின்றது. இந்த ஒப்பந்தம் இரயில்களை உள்ளூரில் தயாரிக்க உதவும் தொழில்நுட்ப பரிமாற்றத்திற்கான உத்திரவாத்தையும் கொண்டிருக்கும்.
  - இது **2022ம்** ஆண்டிற்குள் நாட்டின் முதல் உயர்வேக இரயில் பாதையை நிறுவிடத் திட்டமிட்டுள்ள அரசாங்கத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

- நபார்டு வங்கியானது ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (**Rural Infrastructure Development Fund** – RIDF) கீழ் **மேற்கு வங்கத்தின் நீர்பாசனத்** திட்டங்களுக்கும், வெள்ளப் பாதுகாப்பு திட்டங்களுக்கும் சுமார் 335 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.

- **யூத் அபியாஸ் - இந்தியா மற்றும் அமெரிக்க** இராணுவங்களுக்கிடையேயான செயல்திறனை வலுப்படுத்த **“Yudh Abhyas”** என்னும் பெரிலான கூட்டு இராணுவப் பயிற்சி, 2 + 2 பேச்சுவார்த்தைக்குப் பிறகு செப்டம்பர் 16 முதல் 29 வரை, உத்திரகாண்ட் மாநிலத்தில் உள்ள சௌபட்டியா என்னும் இடத்தில் நடைபெற உள்ளது.
- குறிப்பு:
  - இப்பயிற்சியானது இவ்விரு நாடுகளுக்கிடையேயான 14வது பதிப்பு ஆகும். (14th Yudh Abhyas)
  - இவ்விரு நாடுகளுக்கிடையேயான யூத் அபியாஸ் பயிற்சியானது 2004 முதல் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

- **ஸ்மார்ட் சிட்டீஸ் இந்தியா** என்னும் திட்டத்தால் நடைபெறும் சீர்திருத்தங்கள், மேம்பாடுகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரத்தில் நடைபெறும் வேலைகள் குறித்து விளக்குவதற்காக 4வது **“இந்தியாவின் நிலை யான ஸ்மார்ட் நகரங்கள் மாநாடு”**

**4th Annual Sustainable Smart Cities India Summit** கர்நாடக மாநிலத்தில் உள்ள பெங்களூரில் ஸ்மார்ட் இந்தியா திட்ட இயக்குநர் **A.B. இப்ராஹிம்** தலைமையில் நடைபெற்றது.

## உலக நிகழ்வுகள்

- **''உலகளாவிய முதியோர் மற்றும் வயதானவர்களுக்கான மனித உரிமைகள்'' Global Ageing and Human Rights of Older Person** என்ற தலைப்பின் கீழ் தென்கொரியாவின் சியோல் நகரத்தில், 3வது ஆசிய ஐரோப்பிய சந்திப்பு மாநாடு (ASEM - Asia Europe Meeting) நடைபெற்றது.
  - இம்மாநாட்டில் இந்தியா சார்பில் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது தலைமை வகித்தது.
  - மேலும் UNESCAP – (UN Economic and Social Commission for Asia and the Pacific), UNECE – (United Nations Economic Commission for Europe), ஐரோப்பிய ஒன்றியம், ஆசியான், GANHRI (Global Alliance for National Human Rights Institution) போன்ற பல்வேறு அமைப்புகள் பங்கு பெற்றன.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட **தேஜாஸ்** என்ற இலகு ரக போர் விமானத்திற்கு நடுவானில் மறு எரிபொருள் நிரப்பும் பணியானது முதன்முதலாக இந்திய விமானப் படையால் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.
  - இரஷ்யாவல் கட்டமைக்கப்பட்ட IL – 78 MKI எரிபொருள் நிரப்பு விமானமானது **தேஜாஸ் MK – I** விமானத்திற்கு எரிபொருளை நிரப்பியது.

- கடல்நீரை கண்காணித்து அதனால் பருவநிலை மாற்றத்தில்



We Shine Academy

ஏற்படும் விளைவுகளை கண்டுபிடிப்பதற்காக சீனாவானது **“HY-1C”** என்னும் கடற்சார் செயற்கைகோளை **லாங் மார்ச் 2C** என்னும் இராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

## முக்கிய தினங்கள்

- செப்டம்பர் 08 – **சர்வதேச எழுத்தறிவு தினம்** International Day of Literacy
    - இனம், மொழி, வயது, சமூக பாகுபாடின்றி அனைவரும் எழுத்தறிவு பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு ஐ.நா. சார்பில் 1966 செப்டம்பர் 08 முதல், ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச எழுத்தறிவு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
    - இந்த ஆண்டுக்கான கருத்துரு – **“Literacy and skills development”** **(எழுத்தறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துதல்)**

## நியமனங்கள்

- நிதி அமைச்சகத்தின் அடுத்த பொருளாதார ஆலோசகரைத் தேர்வு செய்வதற்காக முன்னாள் ரிசர்வ் வங்கியின் ஆளுநராக **பிமல் ஜலன்** என்பவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- பிற உறுப்பினர்கள் :
    - 1. C. சந்திர மௌலி (Secretary of the department of Personal and Training)
    - 2. சுபாஷ் சந்திர கார்க் (Economic Affairs Secretary)

    - இப்புதகத்தை செப்படம்பர் 05 அன்று இந்திய குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு வெளியிட்டுள்ளார்.

We Shine Academy